# Periodic Test 2- Tamil-2022-23

## தமிழ்

வகுப்பு: X

காலம் : 3 மணி　　　　　　　　　　மதிப்பெண்கள் : 80

..........................................................................

**பகுதி - அ (படித்தல்)**

**1)அ. கீழ்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக. 5 X 1 = 5**

தானியம் என்பது புல் வகைத் தாவரங்களில் விளைவிக்கப்படும் உணவுப்பொருட்களைக் குறிக்கும். சிறுதானியம் என்பது வரகு, சாமை, தினை, குதிரைவாலி, கம்பு, கேழ்வரகு, சோளம் ஆகிய உருவில் சிறியதாக உள்ள தானிய வகைகளைக் குறிக்கும் சிறுதானியங்கள் பழந்தமிழர் உணவில் பெரும் பங்கு வகித்தது என்பதை பல்வேறு சங்க இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகிறது. மேலும் திருக்குறளில் பல்வேறு பாக்களில் பனை என்பதற்கு எதிர்பதமாய் தினை பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் வள்ளியை முருகன் தினைக்களத்தில் சந்தித்ததை வள்ளி திருமண கதைப் போக்கில் அறிகிறோம். இவ்வகைத் தகவல்கள் வாயிலாக சிறுதானியம் என்பது பாரம்பரிய உணவு என கூறலாம். சிறுதானியங்களில் அதிக அளவில் ஊட்டச்சத்து நிறைந்துள்ளன. இவற்றில் 25 சதவீதம் புரதமும் அதிக அளவு நார்ச்சத்தும் உள்ளது. மேலும் இவை வைட்டமின் 'ஈ', வைட்டமின் 'பி' காம்ப்ளக்ஸ், நியாசின், தயமின். மற்றும் ரிபோ.ஃபிளேவின் போன்றவற்றிற்கு மிகப்பெரிய ஆதாரமாக விளங்குகின்றது. சிறுதானியங்கள் சிறுநீரைப் பெருக்கி, உடலில் உள்ள உப்பைக் கரைக்கும். மேலும் இவற்றிலுள்ள பீட்டாகரோட்டின் கண் குறைபாடுகளைச் சரிசெய்ய உதவும்.

**வினாக்கள்:**

1. தானியம் எத்தாவர வகையிலிருந்து விளைவிக்கப்படுகிறது?

அ) மரம்　　　　　　　　ஆ) புல்

இ) கொடி　　　　　　　　ஈ) புதர்

2. சிறுதானியம் எது?

அ) அரிசி ஆ) பருப்பு

இ) சாமை ஈ) உளுந்து

3. ‘பனை’ என்பதற்கு எதிர்பதமாய் ‘தினை’ என்று எந்நூலில் பயன்படுத்தப்பட்டுள்ளது?

அ) திருக்குறள் ஆ) நாலடியார்

இ) மூதுரை ஈ) ஆத்திசூடி

4. முருகன் வள்ளியை சந்தித்த இடம் எது?

அ) பனைக்களம் ஆ) கரும்புத்தோட்டம்

இ) போர்க்களம் ஈ) தினைக்களம்

5. பீட்டாகரோட்டின் எக்குறைபாட்டைச் சரிசெய்ய உதவுகிறது?

அ) காதுகேளாமை ஆ) கண்குறைபாடு

இ) தோல்நோய் ஈ) முடக்குவாதம்

**அல்லது**

**ஆ) கீழ்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக. 5 X 1 = 5**

தமிழ்நாட்டைச் சேர்ந்த கவிஞரும், தமிழ்ப்பேராசிரியருமான அப்துல் ரகுமான் , நவம்பர் 9, 1937 அன்று மதுரையில் வைகை ஆற்றின் தென்கரையில் பிறந்தவர். “வானம்பாடி“ இயக்கக் கவிஞர்களோடு இணைந்தியங்கிய இவர் , கவிக்கோ என்று சிறப்பாகக் குறிப்பிடப்படுகிறார். தமிழில் முதுகலைப் பட்டம் பெற்று தியாகராசர் நடத்திய ‘தமிழ்நாடு’ என்னும் நாளிதழில் மெய்ப்புத்திருத்துநராகச் சிலகாலம் பணியாற்றினார். எழுதுபவர்களின் தலைவாயிலில் தம் கவிதை வெளியீடுகளின் வாயிலாகப் புதுக்கவிதைத் துறையில் நிலைநிறுத்திக் கொண்டவர்களுள் அப்துல் ரகுமான் குறிப்பிடத்தக்கவர் ஆவார். அவர் பால்வீதி என்ற கவிதைத் தொகுதி மூலம் தம்மை ஒரு சோதனைப் படைப்பாளியாக இனங்காட்டிக் கொண்டார். நேயர் விருப்பம், சுட்டுவிரல், கரைகளே நதியாவதில்லை போன்றன இவரது சிறந்த படைப்புகளில் சிலவாகும். இவரது ஆலாபனை என்னும் கவிதைத்

தொகுப்பிற்காக 1999 இல் சாகித்ய அகாதமி விருது வழங்கப்பட்டது. தமிழில் ஹைக்கூ, கஜல் ஆகிய பிறமொழி இலக்கியங்களைப் பரப்பியதில் இவர் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

**வினாக்கள்:**

1. அப்துல் ரகுமான் ஆற்றிய பணி.

    அ) ஆசிரியர்     ஆ) பேராசிரியர்

    இ) தலைமையாசிரியர்     ஈ) காவலர்

2. கவிக்கோ எந்தக் கவிஞர்களுடன் இணைந்து இயங்கினார்?

    அ) வானம்பாடி     ஆ) கானம் பாடி

    இ) பாடும் பறவை     ஈ) கவிக்குயில்

3. அப்துல் ரகுமான் மெய்ப்புத்திருத்துநராக பணியாற்றிய இதழ் எது?

    அ) பாரதம்     ஆ) இந்தியா

    இ) தமிழ்நாடு     ஈ) விஜயா

4. சாகித்ய அகாதெமி பரிசு பெற்ற நூல் எது?

    அ) நேயர் விருப்பம்     ஆ) சுட்டுவிரல்

    இ) கரைகளே நதியாவதில்லை     ஈ) ஆலாபனை

5. அப்துல் ரகுமானைச் சோதனைப் படைப்பாளியாக இனங்காட்டிய கவிதைத்தொகுதி எது?

    அ) பால்வீதி     ஆ) நேயர்விருப்பம்

    இ) விண்வீதி     ஈ) புதுக்கவிதை

**2) அ. கீழ்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக. 5 X 1 = 5**

தமிழ்நாட்டின் மாநில மலராகவும் தமிழீழத்தின் தேசிய மலராகவும் ஏற்கப்பட்டுள்ள செங்காந்தள் ஜிம்பாவே நாட்டின் தேசிய மலராகும். செங்காந்தள், காந்தள் பேரினத்தைச் சேர்ந்த தாவரமாகும். இது ஆப்ரிக்கா, ஆசியா ஆகிய இடங்களைத் தாயகமாகக் கொண்டது. கார்த்திகைத் திங்களில் முகிழ்விடும் இம்மலர்க்கொடி இலங்கை, இந்தியா, சீனா, மலாக்கா தீபகற்பம், அயனமண்டல ஆபிரிக்கா முதலான பகுதிகளிலும் காணப்படும். வேலிகளிலும், பாதையோரங்களிலும் படர்ந்து நிமிர்ந்து

அழகிய விரல்கள் போலவும், சுடர்கள் போலவும் காட்சியளிக்கும். இதன் அனைத்துப் பகுதிகளும் கோல்சிசினே எனும் அல்கலோயட்கள் நிறைந்தது. இதன் வேர் மிகுந்த நச்சுத்தன்மை கொண்டது. இது கார்த்திகைப்பூ என்றும் அறியப்படுகிறது. கண்வலிக்கிழங்கு எனும் கிழங்கு வகை மூலிகையானது காந்தள் மலர்ச்செடியிலிருந்து பெறப்படுகிறது. அச்செடியின் வேர்ப்பகுதியே கண்வலிக்கிழங்கு ஆகும். இக்கிழங்கில் உள்ள கோல்சிசினும் சூப்பர்பைனும் மருத்துவக் கூறுகளாகத் திகழ்கிறது.

**வினாக்கள்:**

1. தமிழ்நாட்டின் மாநில மலர் எது?

அ) செங்காந்தள் ஆ) தாமரை

இ) மல்லிகை ஈ) செம்பருத்தி

2. காந்தள் மலர்ச்செடியிலிருந்து கிடைக்கும் கிழங்கின் பெயர் என்ன?

அ) கருணைக்கிழங்கு ஆ) கண்வலிக்கிழங்கு

இ) ஆகாசக்கிழங்கு ஈ) கருடக்கிழங்கு

3. காந்தள் மலரின் தாயகம்.

அ) ஐரோப்பா ஆ) ஆஸ்திரேலியா

இ) ஆசியா ஈ) அண்டார்டிகா

4. செங்காந்தளின் வேறுபெயர் என்ன?

அ) டிசம்பர் பூ ஆ) பூசணிப்பூ

இ) சாமந்திப்பூ ஈ) கார்த்திகைப்பூ

5. கண்வலிக்கிழங்கில் உள்ள மருத்துவக்கூறுகள் யாவை?

அ) கோல்சின் , அயோடைக்ஸ்

ஆ) கோல்சிசின் , சூப்பர்பைன்

இ) சூப்பர்ரான் , கோல்சிசின்

ஈ) பென்சிலின், கோல்சிசின்

**அல்லது**

**ஆ) கீழ்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக. 5 X 1 = 5**

சீவக சிந்தாமணி என்பது சங்க காலத்துக்குப் பின்னர் தோன்றிய ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று. இந்நூல் சோழர் காலத்தில் எழுதப்பட்டது. திருத்தக்கதேவர் என்னும் சமண முனிவரால் இயற்றப்பட்ட இக்காப்பியம் சீவகன் என்பவனின் அகவாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டது. சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் தமிழில் தோன்றிய முதல் இரு காப்பியங்களாகக் கருதப்படும், கதையை அடிப்படையாகக் கொண்ட இலக்கியங்களைத் தொடர்ந்து மூன்றாவதாக உருவான கதை கூறும் தமிழ் இலக்கியம் இது. எனினும் முன்னையவற்றைப் போலன்றிச் சீவகசிந்தாமணி விருத்தப்பாக்களால் ஆனது. இதனால் விருத்தப் பாக்களால் ஆன முதல் தமிழ்க் காப்பியமாகவும் இது திகழ்கின்றது. இந்நூல் நாமகள் இலம்பகம் முதலாக முத்தி இலம்பகம் ஈறாக, பதின்மூன்று இலம்பகங்களைக் கொண்டு திகழ்கின்றது. இலக்கியச் சிறப்பு மிக்க இந்நூலில் 3145 பாடல்கள் உள்ளன.

**வினாக்கள்:**

1. சீவக சிந்தாமணி யாருடைய காலத்தில் எழுதப்பட்டது?

அ) சோழர் | ஆ) சேரர்

இ) பாண்டியர் | ஈ) நாயக்கர்

2. தமிழின் முதல் இரண்டு காப்பியங்கள் யாவை?

அ) சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி | ஆ)சீவகசிந்தாமணி, மேகலை

இ) சிலப்பதிகாரம், மணிமேகலை | ஈ) சிலம்பு, வளையாபதி

3. திருதக்கத்தேவர் எச்சமயத்தைச் சார்ந்தவர்?

அ) சைவம் | ஆ) வைணவம்

இ) பௌத்தம் | ஈ) சமணம்

4. சீவகசிந்தாமணி எப்பாவால் ஆனது?

அ) வெண்பா | ஆ) விருத்தப்பா

இ) கலிப்பா | ஈ) வஞ்சிப்பா

5. சீவகசிந்தாமணியில் உள்ள இலம்பகங்களின் எண்ணிக்கை.

அ) பதின்மூன்று ஆ) பத்து

இ) பதினெட்டு ஈ) முப்பது

## பகுதி ஆ (இலக்கணம்)

**3.சான்று தருக (எவையேனும் நான்கனுக்கு மட்டும்) (4)**

1. பொதுமொழி

அ) எண்பது ஆ) எண்

இ) எட்டு ஈ) ஆறு

2. பண்புத்தொகை

அ) வெண்மையாகிய புறா ஆ) மாடப்புறா

இ) நல்லபுறா ஈ) வெண்புறா

3. பெயரெச்சத்தொடர்

அ) படித்த பாடம் ஆ) படிக்காத பாடம்

இ) பாடம் படி ஈ) பாடம் படித்தான்

4. ‘ஆலத்து மேல குவளை’

அ) நிரல்நிறைப் பொருள்கோள்

ஆ) முறை நிரல்நிறைப் பொருள்கோள்

இ) எதிர்நிரல்நிறைப் பொருள்கோள்

ஈ) கொண்டு கூட்டுப்பொருள்கோள்

5. குறிஞ்சிநில மரம்

அ) கொன்றை, காயா ஆ) அகில், வேங்கை

இ) காஞ்சி, மருதம் ஈ) புன்னை, ஞாழல்

**4) கூறியவாறு செய்க.(எவையேனும் நான்கனுக்கு மட்டும்) (4)**

1. வரைந்த (தொழிற்பெயராக்கு)

அ) வரைந்து ஆ) வரைதல்

இ) வரைந்தவர் ஈ) வரை

2. மார்கழி (இருபெயரொட்டுப் பண்புத்தொகையாக்கு)

அ) மாதம் ஆ) மார்கழி நிலவு

இ) மார்கழித்திங்கள் ஈ) நாள்

3. சென்றீர்கள் (படர்க்கை வினையாக்குக)

அ) செல்வீர் ஆ) செல்லுங்கள்

இ) சென்றாய் ஈ) சென்றார்கள்

4. சிறு பறை (நெய்தல்திணைப் பறை ஆக்குக)

அ) ஏறுகோட்பறை ஆ) மீன்கோட்பறை

இ) தொண்டகப் பறை ஈ) துடிப்பறை

5. தேவி, ராதை (ஐயவினா ஆக்குக)

அ) தேவியா பரிசு பெற்றாள்?

ஆ) ராதைக்கு பரிசு கிடைத்ததா?

இ) பரிசு பெற்றது தேவியா? ராதையா?

ஈ) பரிசு பெற்றது யார்?

**5) இலக்கணக் குறிப்பு தருக(எவையேனும் நான்கனுக்கு மட்டும்) (4)**

1. மலர்க்கை

அ) உம்மைத்தொகை ஆ) பண்புத்தொகை

இ) உவமைத்தொகை ஈ) வினைத்தொகை

2. சாலச்சிறந்தது

அ) உரிச்சொல் தொடர் ஆ) இடைச்சொல் தொடர்

இ) வினையெச்சத்தொடர் ஈ) பெயரெச்சத்தொடர்

3. ‘இது செய்வாயா?’ என்ற வினாவிற்கு , ‘நீயே செய்’ என்பது

அ) மறை விடை ஆ) நேர் விடை

இ) இனமொழி விடை ஈ) ஏவல் விடை

4. பேரூர், மூதூர்

அ) குறிஞ்சி ஆ) முல்லை

இ) மருதம் ஈ) நெய்தல்

5. மாசி, பங்குனி

அ) குளிர்காலம் ஆ) கார்காலம்

இ) முன்பனிக் காலம் ஈ) பின்பனிக் காலம்

**6. நிரப்புக. (அனைத்து வினாக்களுக்கும் விடையளி) (4)**

1. செய்யுளிசை அளபெடையின் வேறுபெயர் ................ ஆகும்.

அ) இசைநிறை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை

இ) ஒற்றளபெடை ஈ) சொல்லிசை அளபெடை

2. முற்றுபெறாத வினை, வினைச்சொல்லைத் தொடர்வது ................ ஆகும்.

அ) தொகாநிலைத்தொடர் ஆ)வினையெச்சத்தொடர்

இ) வேற்றுமைத்தொடர் ஈ) வினைமுற்றுத்தொடர்

3. இடம் ................ வகைப்படும்.

அ) ஆறு ஆ) இரண்டு

இ) மூன்று ஈ) ஐந்து

4. நேரடி விடைகளை .................. எனவும் அழைப்பர்.

அ) தனி விடைகள் ஆ) குறிப்பு விடைகள்

இ) எதிர் விடைகள் ஈ) வெளிப்படை விடைகள்

## பகுதி இ (செய்யுள்,உரைநடை, துணைப்பாடம்)

**7. பின்வரும் செய்யுட்பகுதியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய விடைகளை எழுதுக. 5x1=5**

“ ஆழ நெடுந்திரை ஆறு கடந்து இவர் போவாரோ?

வேழ நெடும் படை கண்டு விலங்கிடும் வில் ஆளோ?”

**வினாக்கள்:**

i. இப்பாடல் வரிகள் எந்நூலில் இடம் பெற்றுள்ளது?

அ) சிலப்பதிகாரம் ஆ) காசிக்காண்டம்

இ) கம்பராமாயணம் ஈ) முல்லைப்பாட்டு

ii. இப்பாடல் வரிகள் இடம்பெற்ற காண்டம் எது?

அ) அயோத்தியா காண்டம் ஆ) கிட்கிந்தா காண்டம்

இ) ஆரண்ய காண்டம் ஈ) பால காண்டம்

iii. இப்பாடலை இயற்றியவர் யார்?

அ) அதிவீரராம பாண்டியர் ஆ) இளங்கோவடிகள்

இ) பெருஞ்சித்திரனார் ஈ) கம்பர்

iv. பாடல் வரிகள் இடம்பெற்ற படலம் எது?

அ) ஆற்றுப்படலம் ஆ) நாட்டுப்படலம்

இ) கங்கைப்படலம் ஈ) கங்கை காண் படலம்

v. நெடுந்திரை - பொருள் தருக

அ) பெரிய அலை ஆ) திரைச்சீலை

இ) நீண்ட கடற்கரை ஈ) உயர்ந்த திரை

**8. பின்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக. 5x1=5**

தோலில் செய்த வெட்டு வரைபடங்களை விளக்கின் ஒளி ஊடுருவும் திரைச்சீலையில் பொருத்தி, கதைக்கேற்ப மேலும் கீழும் பக்கவாட்டிலும் அசைத்து , உரையாடியும் பாடியும் காட்டுவது தோற்பாவைக்கூத்து. தோலால் ஆன பாவையைக்கொண்டு நிகழ்த்தும் கலையாதலால் தோற்பாவை என்னும் பெயர் பெற்றது. இதில் இசை, ஓவியம், நடனம், நாடகம், பலகுரலில் பேசுதல் ஆகியவை இணைந்துள்ளன. இந்நிகழ்ச்சியில் பாவையின் அசைவு, உரையாடல், இசை ஆகியனவற்றோடு ஒளியும் முதன்மை இடம்பெறுகின்றது. பாவை குறித்த செய்திகள்

சங்ககாலம் முதல் பதினெட்டாம் நூற்றாண்டுவரையான தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. திருக்குறளில் மரப்பாவையைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. திருவாசகத்திலும் பட்டினத்தார் பாடலிலும் தோற்பாவைக் கூத்து பற்றிய செய்திகளைக் காணமுடிகிறது. ஊர் ஊராகச் சென்று நிகழ்த்துகிற கூட்டுக்குடும்பக் கலையாகத் தோற்பாவைக்கூத்து விளங்குகிறது. தோற்பாவைக் கூத்து கையுறைப் பாவைக் கூத்து, பொம்மலாட்டம் என்பனவாகவும் மாற்றம் பெற்றுள்ளது. நிகழ்கலைகள் ஊரக மக்களின் வாழ்வில் இரண்டறக் கலந்திருக்கின்றன. உழைப்பாளிகளின் உணர்வுகளாக உள்ளன; மக்களின் எண்ண வெளிப்பாடாக, வாழ்க்கையைக் காட்டும் கண்ணாடியாக, மக்களின் சமய வழிபாட்டிலும் வாழ்வியல் நிகழ்வுகளிலும் பிரிக்க முடியாத பண்பாட்டுக் கூறுகளாக விளங்குகின்றன.

**வினாக்கள்:**

i. ஊரக மக்களின் வாழ்வில் இரண்டறக் கலந்துள்ளவை எவை?

அ) திரைப்படம் ஆ) நிகழ்கலைகள்

இ) பொழுதுபோக்கு ஈ) நாடகம்

ii. தோற்பாவைக் கூத்தில் முதன்மை பெறுபவை.

அ) அசைவு, ஒளி ஆ) நாட்டியம், ஒப்பனை

இ) ஆடை , அணிகலன் ஈ) அழகு , நடிப்பு

iii. பொம்மலாட்டம் என்பது எது?

அ) கரகாட்டம் ஆ) புலியாட்டம்

இ) தோற்பாவைக் கூத்து ஈ) தப்பாட்டம்

iv. மரப்பாவையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள நூல் எது?

அ) ஆசாரக்கோவை ஆ) நல்வழி

இ) நாலடியார் ஈ) திருக்குறள்

v. தோற்பாவை குறித்த செய்திகளை எக்காலம் தொடங்கி தமிழ் இலக்கியங்கள் வழியாக அறிய முடிகிறது?

அ) சோழர்காலம் ஆ) சங்க காலம்

இ) சேரர் காலம் ஈ) நாயக்கர் காலம்

**9. பின்வரும் மனப்பாடக் குறள்களைச் சரியான சீர்களால் நிரப்புக. 4x1=4**

i. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்

சுற்றமாச் சுற்றும் ...............

அ) கற்றார் ஆ) மக்கள் இ) சான்றோர் ஈ) உலகு

ii. பொருளல் லவரைப் பொருளாகச் ..............

பொருளல்ல தில்லைப் பொருள்

அ) செய்யும் ஆ) செயல் இ) செல்வம் ஈ) செய்த

iii. நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்

…........... நாடு கெடும்

அ) தினந்தோறும் ஆ) நாள்தொறும் இ) இன்றி ஈ) என்றும்

iv. ஒழுக்கம் .............. தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்

அ) உயர்வு ஆ) செல்வம் இ) விழுப்பம் ஈ) ஆக்கம்

**10. பின்வரும் செய்யுள் வினாக்களுக்குச் சுருக்கமான விடையளி. (எவையேனும் இரண்டனுக்கு மட்டும்) 2x3=6**

1) தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

2) மழை மேகம்,மழைப் பொழிவை முல்லைப்பாட்டு எவ்வாறு வருணித்துள்ளது?

3) வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

4) மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்பு செய்தது ஏன்?

**11. பின்வரும் உரைநடை வினாக்களுக்கு விடையளி.**

**(எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) 3x4=12**

1) தாவரங்களின் அடிப்பகுதி மற்றும் பிஞ்சு வகைகளுக்கு வழங்கப்படும் பெயர்களைப் பற்றி விளக்குக

2) பருவக்காற்றின் வகைகளைக் கூறி விளக்குக.

3) தமிழர்கள் விருந்தை எதிர்கொள்ளும் தன்மை குறித்து எழுதுக.

4) செயற்கை நுண்ணறிவின் பொதுவான கூறுகள் யாவை?

5) பல்துறை வளர்ச்சியில் மொழிபெயர்ப்பின் பங்கு பற்றியும் , மொழி வேலியை மொழிபெயர்ப்பு எவ்வாறு அகற்றுகிறது என்பதையும் விளக்குக.

**12. ஏதேனும் ஒன்று பற்றி ஒருபக்க அளவில் துணைப்பாடக் கட்டுரை எழுதுக.**


1) உரைநடையின் அணிநலன்கள் **1x7=7**

2) விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை

3) பாய்ச்சல்

## பகுதி ஈ (படைப்பாற்றல்)

**13. பின்வரும் காட்சியைக் கண்டு கவினுற வரைக (3)**



**14. ஏதேனும் ஒரு கடிதம் எழுதுக.** 1x6=6

i. உங்கள் ஊரில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தருமாறு மாவட்ட ஆட்சித்தலைவருக்குக் கடிதம் எழுதுக.

ii. நீ கண்டு களித்த அறிவியல் பொருட்காட்சி பற்றிய உனது கருத்துகளை நண்பனுக்குத் தெரிவித்துக் கடிதம் எழுதுக.

(உனது முகவரி: கவியரசி / கவியரசன் ,எண் :543, வ.உ.சி நகர், தூத்துகுடி எனக் கொள்க)

iii. பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்ட பூங்காவில் மழைக்காலங்களில் நீர்த்தேங்காமல் இருப்பதற்கு நிரந்தர தீர்வு காணுமாறு நகராட்சித் தலைவருக்கு மின்னஞ்சல் கடிதம் எழுதுக.

( உனது முகவரி: இனியவன்001@ஜிமெயில்.காம்)

**15. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒருபகுதியின் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.** 1x6=6

i. முன்னுரை– மனித நேயம் – அவசியம் - இலக்கியங்கள் காட்டும் மனித நேயம் - குறைந்துவரும் மாண்பு - மனித நேயம் வளர்ப்போம் – முடிவுரை

ii. முன்னுரை – மூலிகை மருத்துவம் – மூலிகைத்தாவரங்கள் – பயன்கள் – நோய்களும் மூலிகைகளும் – பாதுகாத்தல் நம் கையில் – முடிவுரை

iii. முன்னுரை – தமிழின் தொன்மை – தமிழின் சிறப்பு – சான்றோர் வளர்த்த தமிழ் – முச்சங்கம் கண்ட மொழி – பாதுகாப்பது நம் கைகளில் –– முடிவுரை

✦✦✦✦✦✦✦